Deposition of Witness for : PW-1 | Date : 25/04/2023
Case No. : O.S. 49/2021 | Nationality : Indian
Name : பன்னீர்செல்வம் | Religion :
Father's/Husband's Name : ரெங்கநாதன் | Age : 70
Village :
Taluk :

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கினை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சுந்தரேசன், ஜெயலலிதா, சூர்யபிரகாஷ் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் சூரியனார்கோவில் கிராமத்தில் உள்ளது. 1ம் பிரதிவாதி சுந்தரேசன் எனது உடன்பிறந்த சகோதரர். 2ம் பிரதிவாதி ஜெயலலிதா எனக்கு அண்ணி முறை ஆவார். 3ம் பிரதிவாதி சூர்யபிரகாஷ் எனது அண்ணன் மகன் ஆவார். ஜெயலலிதாவின் கணவர் பெயர் என்னவென்றால் ஜெயராமன்.

2. ஜெயலலிதாவின் கணவர் ஜெயராமனும் நானும் வெளிநாட்டில் ஒன்றாக வேலை செய்து வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. தனித்தனியாகத்தான் வசித்து வந்தோம். 1ம் பிரதிவாதிக்கு 1996 ம் வருடம் நான் எழுதி கொடுத்த பொது அதிகார ஆவணம் இந்த வழக்கு சொத்தையும் சேர்த்து தான் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். தாவா சொத்தினை 1ம் பிரதிவாதிதான் பாதுகாத்து , பராமரித்து சாகுபடி செய்து வந்தார் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாவா சொத்தில் எந்த தேதியில் பிரச்சனை செய்தார்கள் என்றால் 25/01/2021ம் தேதி பிரச்சனை செய்தார்கள்.

3. மேற்படி தேதியில் பிரதிவாதிகள் பிரச்சனை செய்யவில்லை என்றாலும், மேற்படி தேதியில் பிரச்சனை செய்ததாக நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றாலும்

சரியல்ல. மேற்படி தேதியில் நான் திருப்பனந்தாள் காவல் நிலையத்தில் பிரச்சனை சம்மந்தமாக புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

**பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.